REGD: NO: M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 85630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4) சென்னை: மாசி 5உ. சனி (16—2—57) ★ ★ வெளியீடு: மாசி 6உ. ஞாயிறு (17—2—57) (இதழ் 215

கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க மறுக்கும் காங்கிரஸ் ஆட்சியின் அகம்பாவம்

சம்பளம் வாங்க மறுத்து இரயில்வே நிலைய ஊழியர் போராட்டம்

சென்னை, பிப். 15—

தங்களுடைய நீண்டநாளையக் கோரிக்கைகளுக்குச் செவிசாய்க்க மறுக்கும் நிர்வாகத்தின் கவனத்தை ஈர்ப்பதற்காக, தென் பிராந்திய இரயில்வேயைச் சேர்ந்த சுமார் 862 ஸ்டேஷன்மாஸ்டர்கள், உதவி ஸ்டேஷன்மாஸ்டர்கள் ஆகியோர், தங்களது ஜனவரி மாதச் சம்பளத்தை வாங்க மறுத்துப் போராட்டம் நடத்திவருகின்றனர்.

காங்கிரசின் சர்வாதிகாரத்தைச் சாய்க்க!

போட்டியிலிருந்து விலகிக்கொண்ட கழகத் தோழர்கள்

தலைமைக் கழக (தி. மு. க.) அறிக்கை

காங்கிரஸ், இந்த பொதுத் தேர்தலில் முறியடிக்கப்பட்டு, அதன் சர்வாதிகாரம் சாய்க்கப்பட்டாக வேண்டும் என்ற கருத்துடன், பல முற்போக்குக் கட்சிகளும் சனநாயக வேட்கைகொண்டோரும் விரும்பி, இந்தத் தேர்தலில் காங்கிரசை எதிர்த்துப் போட்டியிடும் நிலையை நாடு காண்கிறது.

காங்கிரஸ் எதிர்ப்பாளர்களுள் ஒரு கூட்டு ஏற்பட வேண்டுமென்ற முயற்சி நடைபெற்றும் உருவாக முடியாதுபோய் விட்டதால், பல இடங்களில் காங்கிரசை எதிர்த்துப் பலர் போட்டியிடும் நிலைமை ஏற்பட்டதுடன், சில இடங்களில் இந்த நிலைமை காங்கிரஸ் வெற்றிபெறும் சூழ்நிலையை உண்டாக்கிவிடக்கூடும் என்ற எண்ணம் ஏற்பட்டுவிட்டது.

திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளரிடம் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களிலே குறிப்பிடத் தக்கவர்கள் இது குறித்துப் பேசி, காங்கிரசைத் தோற்கடிப்பதற்காக வேண்டி, தமக்குள் நேசப்பான்மையுடன் அந்தந்தத் தொகுதியின் நிலைமைகளையும் வெற்றிக்கான வாய்ப்புகளையும் ஆராய்ந்து பார்த்து, சில மாறுதல்கள் செய்துகொள்ள வேண்டும் என்பது பற்றிப் பேசி இசைவு பெற்றனர்.

திராவிட முன்னேற்றக் கழக அபேட்சகர்கள் போட்டியிடும் பல தொகுதிகளில் போட்டியிடவிருந்த காங்கிரஸ் எதிர்ப்பாளர்கள் விலகினர். அதற்கேற்ப நாமும், அதற்கு ஈடு செய்யும் வகையிலும் வீண் சிக்கலைத் தவிர்க்கவும், சில இடங்களில் நாம் விலகிக்கொண்டு காங்கிரஸ் தோல்விக்கான சூழ்நிலையைச் செம்மைப்படுத்திவைக்க ஒப்பவேண்டியதாயிற்று.

இந்த ஏற்பாட்டுக்கு நமது கழக அபேட்சகர்களாக நிறுத்தப்பட்டிருந்த தோழர்கள் பெருந்தன்மையுடன் சம்மதமளித்துக் காங்கிரஸ் சர்வாதிகார ஒழிப்புக்குத் தங்கள் சக்தியைப் பயன்படுத்த மனப்பூர்வமாக இசைவு அளித்துள்ளனர். கீழ்க்கண்ட நமது தோழர்களின் கண்ணியத்திற்கும் கடமை உணர்ச்சிக்கும் நமது நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்:—

1. உத்திரமேரூர் தொகுதி—தோழர் சி. பஞ்சாட்சரம்;
2. திருக்கோயிலூர் தொகுதி—தோழர் டி. என். ஜி. அண்ணாமலை;
3. குடியேற்றம் (தனி) தொகுதி—தோழர் மணிஎழிலன்;

சென்னை—திருவல்லிக்கேணி தொகுதியில் பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் அவர்கள், தாம் அளித்த வாக்குறுதிப்படி போட்டியிலிருந்து விலகிக்கொள்ளுமாறு வேண்டிக் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

தத்தமது தொகுதிகளில் இந்த நம் கழகத் தோழர்கள் பணியாற்றித் திரட்டி வைத்துள்ள ஆதரவு, இதுபோது வீணாக்கப்படுவது அவர்களுக்கெல்லாம் மனச்சங்கடம் தரக்கூடியது என்றபோதிலும், கழகத்தின் திட்டத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்பதற்காக, அவர்கள் வேதனையைக் கூட பொறுப்புணர்ச்சியுடன் தாங்கிக்கொள்ள முன்வந்ததற்குக் கழகம் அவர்களுக்குப் பெரிதும் நன்றிகூறிக்கொள்கிறது.

இவர்களுக்காக இதுநாள்வரையில் ஆதரவு திரட்ட அரும்பணியாற்றிய கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும், இந்த நிலைகண்டு மனம் நொந்துகொள்வார்கள் என்றபோதிலும், கழகம் மேற்கொண்டுள்ள பணியில், இந்த ஏற்பாடு அவசியமாகிவிட்டது என்பதை அறிந்து அவர்கள் ஆறுதல் அடைவதுடன், கழகம் மேற்கொண்டுள்ள முறை, கழகத்தின் மொத்த நன்மையையும் சனநாயக வெற்றியையும் கருதியே செய்யப்பட்டது என்பதை எண்ணி, தமது சம்மதத்தையும் ஒத்துழைப்பையும் கழகத்தின்பால் ஒப்படைத்துள்ளனர். அவர்களுக்கெல்லாம் கழகம் நன்றி கூறிக்கொள்வதுடன், நமது கழக அபேட்சகர்கள் விலகிக்கொண்டதால் நமது பணி அங்கே இனி ஏதும் இல்லை என்று கருதிக்கொள்ளாமல், அந்த இடங்களிலெல்லாம், காங்கிரஸ் தோல்வி அடைவதற்கான பணியில் தீவிரமாக ஈடுபட வேண்டுமென்று தலைமைக் கழகம், பணிவன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

தி. மு. கழக அபேட்சகர்கள்

★

பார்லிமெண்டு:

கிருஷ்ணகிரி: இரா. செகந்நாதன்
கோவை: அ. பழனிசாமி

★

சட்டசபை:

ஆலங்குடி (தனி): ஏ. ஆறுமுகம்

தி. மு. கழக ஆதரவாளர்கள்

★

சட்டசபை:

தாராபுரம்: பி. எஸ். கோவிந்தசாமி

★

பார்லிமெண்டு:

விருதுநகர் தொகுதி: வி. வி. இராமசாமி

ஆசிரியர்களின் அடிப்படைச் சம்பளம்

ரூ. 100 ஆக உயர்த்த வேண்டுமெனக் கோரிக்கை

திருவாரூர், பிப். 15—

கட்டாயக் கல்வியை தீவிரமாகத் தமிழ் நாட்டில் அமுல் செய்ய வேண்டும் என்றும், மத்திய அரசாங்க விகிதப்படி எல்லா ஆசிரியர்களுக்கும் கிராக்கிப்படி தரவேண்டும் என்றும், ஆசிரியர்களின் ஊதியத்தில் பாதி தொகையைப் பென்ஷனாகத் தரவேண்டும் என்றும், ஆரம்ப ஆசிரியர்களுக்குக் குறைந்தபட்ச சம்பளம் ரூ 100 ஆக உயர்த்தப்படவேண்டும் என்றும் கோரி இங்கு நடைபெற்ற தஞ்சை மாவட்ட ஆரம்ப ஆசிரியர்கள் மாநாட்டில் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டுள்ளன.

மேலும் 3,60,000 தொழிலாளர்கள்

பிராவிடண்ட்நிதி வசதிபெறுவராம்

புதுடில்லி, பிப். 14—

1952-ம் வருடத்திய தொழிலாளர் பிராவிடண்ட் பண்டு சட்டத்தை விரிவாக்குவது என்று டில்லி மேற்கொண்டுள்ள முடிவின் காரணமாக மேலும் 3 60,000 - தொழிலாளர்கள் பிராவிடண்ட் நிதி வசதி பெறுவர் என்று தெரியவருகிறது.

தேயிலை, காப்பி, இரப்பர், ஏலக்காய், மிளகு முதலியன பயிராகும் தோட்டங்களில் வேலை செய்யும் தொழிலாளர்களுக்கு இந்த வசதி இப்போது செய்து தரப்படுகிறது.

இதுவரையில் இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 4,000-த்திற்கு மேற்பட்ட தொழிற்சாலைகள் வந்துள்ளனவாம். சந்தாதாரர்கள் 17 - இலட்சத்திற்கும் அதிகமாம்.

நிதியில் மாதந்தோறும் ரூ. - 1,65,00,000 சேருகிறதென்றும், 1956-ம் ஆண்டு நவம்பர் முடிய மொத்தம் ரூ 73 கோடி நிதியில் சேர்ந்திருப்பதாகவும் தகவல் தரப்பட்டிருக்கிறது.

மீண்டும் நெருக்கடியா?

கெய்ரோ, பிப். 13—

எகிப்துக்கு உரிமையுள்ள காசா—அகாபா பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேற மறுப்பதால், சூயஸ் கால்வாயில் தடைகளை அகற்றும் வேலையை எந்த நேரத்திலும் நிறுத்திவிடக்கூடிய நெருக்கடி ஏற்பட்டு வருவதாகக் கருதப்படுகிறது.

காஷ்மீர் தகராறுக்கு பைசல் காண சுவீடன் பிரதிநிதி

ஐ. நா. பாதுகாப்புச் சபையில் தீர்மானம்

நியூயார்க், பிப். 15—

"காஷ்மீர் விவகாரம் பற்றி விவாதிக்க, இந்தியா, பாகிஸ்தான் நாடுகளுக்கு இப்போதைய பாதுகாப்புச் சபையின் தலைவரும் சுவீடன் நாட்டைச் சேர்ந்தவருமான குன்னூர் வி. ஜாரிங் என்பார் செல்ல வேண்டும்,"

என்ற தீர்மானம் ஒன்றை, பிரிட்டன் அமெரிக்கா, ஆஸ்திரேலியா, கியூபா ஆகிய நாடுகள் கொண்டுவந்துள்ளன என்று தெரியவருகிறது.

ஜாரிங், இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் சுவீடன் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியிருக்கிறார்

ஐ. நா., காஷ்மீர் விவகாரத்தில் ஏற்கனவே மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளையும் முடிவுகளையும் கருத்தில் கொண்டு, இரு அரசுகளுடனும் பேச்சுவார்த்தை நடத்தி, விவகாரத்திற்கு ஒரு சுமூகமான பைசல் காண வழி செய்யவேண்டும் என்றும், ஏப்ரல் 15 ந் தேதிக்குள் அவர் தனது அறிக்கையை பாதுகாப்புச் சபைக்குத் தரவேண்டும் என்றும் தீர்மானம் கூறுகிறது.

இவருக்கு; ஐ நா. செயலாளரும் ஐ. நா.-வின் பிரதிநிதியாக முன்பு காஷ்மீருக்கு அனுப்பப்பட்ட டாக்டர் கிரஹாமும், இவர் கோரும் உதவிகளைச் செய்யவேண்டும் என்றும் தீர்மானம் கேட்டுக்கொண்டிருக்கிறது.

இந்தியா நிராகரிக்கும்?

புதுடில்லி, பிப். 15—

காஷ்மீர் பற்றி ஐ நா.-வில் கொண்டுவரப்படும் புதிய தீர்மானத்தை இந்தியா நிராகரிக்கும் என்று உயர்தர வட்டாரங்கள் கூறுகின்றனவாம்.

★

நேரடிப் பேச்சு பலன் தராதாம்!

கராச்சி, பிப் 15—

"காஷ்மீர் விவகாரம் குறித்து, இந்தக் கட்டத்தில் இந்தியாவும் பாகிஸ்தானும் நேரடிப் பேச்சுவார்த்தை மேற்கொள்ளுவது பலன் தராது"

என்று, பாகிஸ்தான் பிரதமர் சுராவர்த்தி, இலங்கைப் பிரதமர் பண்டாரநாயகாவுக்குத் தெரிவித்திருக்கிறாராம்!

அல்ஜீரியப் பிரச்சினை

நியூயார்க், பிப். 15—

"நேர்மையான வழி முறைகளைக் கடைப்பிடிப்பதாலும் ஒருவருக்கொருவர் நல்லெண்ண மனப்போக்குடன் நடந்துகொள்வதாலும் அல்ஜீரியப் பிரச்சினைக்கு ஒரு சுமூகமான—அமைதியான ஜனநாயக பரிகாரம் காணமுடியும்"

இவ்வாறு அல்ஜீரியப் பிரச்சினை குறித்து விவாதித்த ஐ. நா. சபையில் ஒரு சமரசத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

கம்யூனிஸ்டுகள் வெள்ளையருக்கு வால்பிடித்த வரலாறு!

பண்டித பந்த் தரும் விளக்கம்

'இந்தியாவை ரஷ்யாவுக்கு அடிமைப்படுத்த விரும்புகிறார்கள்' எனவும் குற்றஞ்சாட்டுகிறார்

பாட்டியாலா, பிப். 15—

"காந்தியார், 'வெள்ளையனே! வெளியேறு!' என்ற இயக்கத்தை 1942-ம் ஆண்டில் நடத்தியபோது கம்யூனிஸ்டுகள், வெள்ளைக்காரருக்குச் சாதகமாக அவர்களுக்கு வால்பிடித்துக்கொண்டிருந்தார்கள்" என்று உள்நாட்டு அமைச்சர் பண்டித பந்த், இங்கு நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

'கம்யூனிஸ்டுகள், எதற்கெடுத்தாலும் மாஸ்கோவையே நோக்குகிறார்கள்' என்றும் கூறிய பண்டித பந்த், 'கம்யூனிஸ்டுகள், ரஷ்யாவின (ஆதிக்கத்திற்குட்பட்ட) ஒரு பகுதியாக இந்தியா இருக்க வேண்டுமென விரும்புகிறார்கள்' என்றும் கூறியிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 16—2—'57 சனி

'காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே'

'காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே' எனக் கூறப்படும் கருத்துக்கும் 'திராவிட நாடு திராவிடர்களுக்கே' என முழங்கப்படும் முழக்கத்திற்கும், அடிப்படைப் பொருளளவில் கடுகளவு வேற்றுமையும் கிடையாது.

'காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே' என்ற கருத்தின் அடிப்படைப் பொருளை, நியாயமானது—நேர்மையானது—ஏற்றுக்கொள்ளத் தக்கது என முழுவிருப்புடன் வெளிப்படையாகக் கூறும் எவரும், 'தமிழ் நாடு தமிழர்களுக்கே'—'ஆந்திர நாடு ஆந்திரர்களுக்கே' என்ற இரு கோரிக்கைகளிலும் அடங்கியுள்ள அடிப்படைப் பொருளை, நியாயமானது—நேர்மையானது—ஏற்றுக்கொள்ளத் தக்கது என்றுதான் திட்டவட்டமாகக் கொள்ளவேண்டும்.

'காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே' என்ற கோரிக்கையை நியாயமானது எனக் கூறும் அதே வாயால், 'தமிழ் நாடு தமிழர்களுக்கே' என்ற கோரிக்கை நியாயமற்றது எனப் பேசுவது அறமாகாது — முரண்படப் பேசுவதுமாகும்.

'காஷ்மீர் காஷ்மீரிகளுக்கே' என்ற கோரிக்கை இந்திய தேசியத்திற்கு எதிரானதோ, துரோகம் செய்வதோ ஆகாது என்ற நம்பிக்கையில், அக்கோரிக்கை நியாயமானது என வெளிப்படையாகக் கூறும் அதே மூச்சில், 'தமிழ் நாடு தமிழர்களுக்கே' என்ற கோரிக்கை, இந்திய தேசியத்திற்கு விரோதமானது—துரோகம் நிரம்பியது என எண்ணி, 'அது கூடாது - ஆகாது' எனச் செப்புவது பொருத்தமற்றது - கருத்துத் தெளிவற்றது.

காஷ்மீர் மக்களுக்கு ஏற்க முன்வரும் முறையைத் தமிழ் மக்களுக்கு மறுக்க முன்வருவது, இத்தகைய முரண்படும் முறை கூறுபவரின் உள்ளத் தூய்மையையும் அறிவுத் தெளிவையும் அவநம்பிக்கைக்கு உள்ளாக்கிவிடக் கூடியதாகும்.

அவரா இப்படிக் கூறியுள்ளார்?—அவர் ஒருக்காலும் அப்படிக் கூறியிருக்க முடியாதே?—என்ற ஐயப்பாடு எவருக்கும் ஏற்படுவது இயல்பேயாகும்.

ஏனெனில் ஒரு கிழமைக்கு முன்புதான், சென்னை திடற் பத்திடலில், 'உச்சிமீது வானிடிந்து வீழ்வதானாலும் திராவிட நாடு தரமாட்டேன்' என்று முழக்கமிட்டிருக்கிறார், அதே பிரதமர் நேரு!

திராவிடப் பெருங்குடி மக்களுக்குத் தரமுடியாதென்றும் கிடையாதென்றும் அழுத்தம் திருத்தமாகக் கூறிய அதே இந்தியப் பிரதமர், ஒரு கிழமைக்குள்ளாக, 'காஷ்மீர் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை உண்டு; காஷ்மீர், காஷ்மீர் மக்களின் உடைமையாகும்; அது நம்முடைய சொத்து அல்ல; அவர்கள் ஒப்புதல் இல்லாது ஒரு விநாடியும் நாம் அங்கு இருக்கத் துணியமாட்டோம்—எனக் கூறக் கிளம்புவது என்றால், அதை எவரால்தான் நம்ப முடியும்?

'அவ்வளவு பெரியவரா, இப்படி முரண்பட—அதிலும் ஒரு கிழமைக்குள்ளாகப் பேசியிருப்பார்? — நம்பமுடியவில்லையே' என்றுதான் எவரும் எண்ணிடக்கூடும். அது, எதிர்பார்க்கக்கூடியதேயாகும்.

இத்திங்கள் ஆறாந் தேதி அலகாபாத் நகரில் மாபெரும் கூட்டம் ஒன்றில் பேசும் பொழுதுதான், இந்தியப் பிரதமர் நேரு, காஷ்மீருக்கும் காஷ்மீர் மக்களுக்கும் உள்ள உரிமை பற்றி மேல்குறிப்பிட்டுள்ளவாறு கூறியுள்ளார்.

காஷ்மீர் பற்றி தாம் கூறியுள்ள கருத்தைத் தமிச்சையாக அவர் கூறினதாகவும் தெரியவில்லை. கூட்டத்திலிருந்த சிலர் 'காஷ்மீர் இந்தியாவிற்குச் சொந்தமானது' எனக் கூச்சலிட்டுள்ளனர். அவ்வாறு கூச்சலிட்டவர்களுக்குத் தெளிவேற்படுத்தும் முறையிலேயே, இந்தியப் பிரதமர் மேற்கண்ட விளக்கம் தந்துள்ளார்.

அவர் பேச்சின் சாரம் 'இந்து' இதழில் தரப்பட்டுள்ளது. அதை, ஆங்கில மொழியில் அப்படியே தருகிறோம்:—

'I want to tell those who raise the slogan that Kashmir is not ours, but it is of the Kashmiris. We cannot stay in Kashmir for a moment without the consent of the Kashmiris. It is not our property.'

"காஷ்மீர் நம்முடையதல்ல; ஆனால் அது காஷ்மீர் மக்களுடையதாகும். காஷ்மீர் மக்களின் ஒப்புதல் இல்லாமல் நாம் அங்கு ஒரு விநாடியும் இருக்கமாட்டோம். அது நம்முடைய உடைமை அல்ல."

சிறந்த அரசியல் தத்துவ நூற்கள் அனைத்தும் ஒப்புக்கொண்டுள்ள இடமகத்தான 'சுய நிர்ணயம்' என்னும் பேருண்மை, குறிப்பிட்ட நாட்டின் மக்களுக்கு இயல்பாக இருந்துவரும் பிறப்புரிமை, காஷ்மீர் மக்களுக்கும் உண்டு—நிச்சயமாக உண்டு என ஒப்புக்கொண்டதுடன் தெளிவுபட விளக்கியும் கூறியுள்ளவர் எவர் என எண்ணுகிறீர்கள்?

அவர்தான், இந்தியப் பிரதமர்—காஷ்மீர் பண்டிதர்—ஆசியாவின் சோதி—மனிதகுல மாணிக்கம்—பஞ்சசீல போதகர் என்று புகழ்ந்து கூறப்பட்டுவரும் பண்டித நேரு அவர்களாவார்.

காஷ்மீர் இந்தியாவின் உடைமை அல்ல என்ற இந்தியப் பிரதமரின் தெளிவுரையில், காஷ்மீரிகள் இந்தியர்கள் அல்லர் என்பதும் உள்ளடக்கமாக இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. அது போன்றே, தமிழர்களும்—திராவிட இனவழி வந்த மொழிகளைத் தாய் மொழிகளாகக் கொண்ட ஆந்திரர், கன்னடர், கேரளர் ஆகியோரும் இந்தியர் அல்லர் என்பது தெளிவுபடத் தெரிகிறது. திராவிட இன மொழி வந்த நான்கு மொழியினரும், தம் தம் நிலப்பரப்பிற்கு, காஷ்மீர் பகுதிக்குக் காஷ்மீர் மக்கள் உரிமைகொண்டாடுவது போன்று உரிமை கொண்டாடுவது குற்றம் எதுவும் இல்லை என்பதும் பெறப்படுகிறது. எனவே, மேற்படி நான்கு மொழியினரும், தாம் தாம் வாழும் நிலப்பரப்பிற்கு 'சுயநிர்ணய' உரிமை கோருவதில், தேசிய விரோதமோ, துரோகமோ அணுவளவும் இல்லை என்பதும் உறுதியாகிறது.

காஷ்மீர், காஷ்மீர் மக்களின் உடைமையாகும் என ஒப்புக்கொண்டுள்ள இந்தியப் பிரதமர், தமிழ் நிலப் பரப்பு தமிழ்ப் பெருங்குடி மக்களின் உடைமை என ஒப்புக்கொள்ள மறுக்கலாமா? அது நீதியாகுமா? நேர்மையாகுமா?

காஷ்மீர் மக்களுக்கு ஒரு நியாயமும் தமிழ் மக்களுக்கு வேறு ஒரு நியாயமும் கூறிவரும் இந்தியப் பிரதமரின் செயல், அறத்துடன் கூடிய அறிவுடைமையாகுமா? சிறக,

இந்தியப் பேரரசு காஷ்மீரில் ஆதிக்கம் செலுத்தவேண்டுமானால், காஷ்மீர் மக்களின் ஒப்புதல் இருந்தால்தான் அது சாத்தியமாகும் எனப் பண்டிதர் கூறியிருப்பதைக்கொண்டு, தமிழ் நாட்டின்மீது ஆதிக்கம் செலுத்தத் தமிழ் மக்களின் ஒப்புதலை இந்தியப் பேரரசு பெற்றேயாகவேண்டும் என நாம் கூறிவருவது அறநெறியேயாகும் என்பதை இந்தியப் பிரதமர் ஏற்றுக்கொண்டேயாகவேண்டும். அவ்வாறு ஏற்க மறுக்க இந்தியப் பிரதமருக்கு நியாயம் எதுவும் கிடையாது.

இந்தியப் பிரதமர் காஷ்மீருக்கு நியாயம் கூறிவிட்ட பிறகு நமது தன்னாட்சி அல்லது சுயநிர்ணயக் கோரிக்கையில் அடங்கி இருக்கும் நியாயத்தை அவரால் எந்த வகையிலும் மறுக்க முடியாது.

அதிகாரத் துணைகொண்டல்லாது அறத்துணை கொண்டு நமது கோரிக்கையை அவரால் அடக்கிவிடமுடியாது.

எனவே, நமது கோரிக்கை நியாயமானது என்ற உண்மையை, இந்தியப் பிரதமரும் மறைமுகமாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பதை நாம் கருத்தில் கொள்ளவேண்டும். இந்த உண்மையைத் தெரிந்துகொள்ளும்படி இங்குள்ள காங்கிரசுத் தலைவர்கள் எனப்படுகிறவர்களை வேண்டிக்கொள்ளுகிறோம்.

தமிழை அழித்துச் சவமொழியை உயிர்ப்பிக்க டெல்லியின் சதித்திட்டம்?

நெசவாளரிடம் திடீர் அக்கறை!

சென்னை, பிப். 14—

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நெசவாளருக்கு உடனடியாக ரூ. 2 இலட்சம் வட்டியில்லாக் கடனாக வழங்குவதற்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம்.

கூட்டுறவுச் சங்கத்தில் சேர்ந்துள்ள தறிக்கு ரூ 100 வீதம் தரப்படுமாம்; இதை 10 ஆண்டு காலத்தில் திருப்பித்தர வேண்டுமாம்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் 16,000 தறிகளும் 81 கூட்டுறவு சங்கங்களும் 75,000 நெசவாளரும் இருக்கின்றனர்.

சவமொழிக் குழுத் தலைவரின் விஷமம் மூலம் அம்பலம்

'திராவிட நாகரிகமே இந்தியாவின் பழம்பெரும் நாகரிகம் என்பது வெளிப்படை'

"உலகின் உயர்தனிச் செம்மொழிகளாகக் கருதப்படுபவை கிரேக்கம், இலத்தீன், ஹீப்ரு, சீனம், ஆரியம், தமிழ் ஆகியவையாகும். சொல்லமைப்பு ஒலியமைப்பு, இலக்கண முறை ஆகியவற்றில் தென்மொழி தனித்தன்மையுடையது; வடமொழியினின்று வேறுபட்டது. தமிழர் நாகரிகம், வடமொழி நாகரிகத்திலும் காலத்தால் முந்தியது என்பதுமட்டுமல்ல—நிலையாலும் உயர்ந்தது. மொழியுடன் வாழ்க்கைக்கும் இலக்கணத்தைச் சேர்த்து அமைத்துக் கொண்டு வாழ்ந்த பெருமை தமிழருக்குரியது.

"எல்லா நிலைகளிலும் ஒழுக்கத்தையும் செந்நெறியையும் அடிப்படையாகக்கொண்டு வாழ்ந்த பண்டை இனம் தமிழினமேயாகும். புறவாழ்வில் பொருள் வளமும் அகவாழ்வில் அருள் வளமும் நிரம்பி வாழ்ந்த முதுகுடித் தமிழரின் நாகரிகமே தொன்மையுடையது.

"தமிழ் மொழியின் உருவையும் அமைப்பையும் குலைத்துவிட வடமொழி எவ்வளவோ முயன்றது. ஆயினும் தென்மொழி, நிலையோ உருவோ குலையாமல், இன்னும் சீரிளமைத் திறத்துடன் வாழ்ந்துவருகிறது.

"தமிழருடைய வாழ்விலும் தமிழ்ப் பண்பாடு, இன்றளவும் தோன்றாத் துணையாய் உள்நின்று விளங்கிவருகிறது. இந்நிலையில் 'உலக வழக்கு அழிந்து ஒழிந்து' மக்களுடன் உயிர்த் தொடர்பு கொள்ளாத மொழியொன்றே இந்தியாவின் நாகரிக அடிப்படையெனக் கருதல், கற்பனை உலகில் வாழ விரும்புவோருக்கே ஏற்றது; வரலாற்றுச் சான்றுக்கோ, உண்மைக்கோ, அறிவியலுக்கோ ஏற்றதாகாது."

—இவ்வாறு, 'உண்மைக்கு ஒவ்வாதது' என்ற தலைப்பில், 13-2-57 'தமிழ்நாடு' இதழ், தனது தலையங்கத்தில் குறிப்பிட்டுவிட்டு, 'இந்திய நாகரிகமென்பது வடமொழி நாகரிகமே' என்று கூறிய சமஸ்கிருதக் குழுத் தலைவரின் விசித்திரமான கருத்துபற்றி மேலும் எழுதியுள்ளதாவது:—

"இந்திய நாகரிகமென்பது வடமொழி நாகரிகம் தவிர வேறில்லையாம்! வரலாற்றுக்கும் உண்மைக்கும் புறம்பான இந்த விசித்திரக் கருத்தைச் சமஸ்கிருதக் குழுத் தலைவர் டாக்டர் சுனீத் குமார் சாட்டர்ஜி சென்னையில் கூறியுள்ளார்.

"இக்கருத்து வரலாற்று, மொழி ஆராய்ச்சி அறிஞர்கள் அறிந்தாய்ந்து கண்ட முடிவுகளுக்குப் புறம்பானது. வடமொழியின் தொன்மையையும் அழகையும் டாக்டர் சாட்டர்ஜி புகழ்ந்திருந்தால் நமக்குக் கவலையிருந்திருக்காது. ஆனால் 'இந்திய நாகரிகமென்பது வடமொழி நாகரிகமே' என்ற ஆதாரமற்ற கருத்தை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

"இந்திய அரசாங்கம் நிறுவியுள்ள விசாரணைக்குழு ஒன்றின் தலைவர், இவ்வாறு பொறுப்பற்ற முறையில் தமிழ்நாட்டின் தலைநகராகிய சென்னையில் பேசியிருப்பது வியப்பைத் தருகிறது. இத்தகைய பேச்சுக்கள் வடமொழியின் செல்வாக்கு வளரப் பயன்படாது; வடமொழியைத் தமிழர் கடிந்து ஒதுக்கும் நிலையையே இவை தோற்றுவிக்கும்.

"இந்தியத் துணைக் கண்டத்தின் நாகரிக அடிப்படை தமிழ் நாகரிகமே ஆகும். ஏனெனில் ஆரியர்கள் இந்நாட்டிற்குள் நுழைவதற்கு முன்பே செழித்து வளம் பெற்று ஓங்கிநின்ற தொன்மை நாகரிகம் திராவிட நாகரிகமே! இந்த உண்மையை, வரலாற்றுப் பேரறிஞர்கள், அறிவியல் உலகத் தலைவர்கள் ஆகிய அனைவருமே ஏற்றுக்கொள்கின்றனர். இதற்கு எண்ணிறந்த ஆராய்ச்சி நூல்கள் உறுதுணையாய் நிற்கின்றன. இந்த உண்மைக்கு அரப்பா-மொகஞ்சதாரோ நாகரிகச் சின்னங்களே போதிய சான்றாகும்.

"திராவிட நாகரிகமென்பது தென்னாட்டு நாகரிகத்தையே பொதுவாகக் குறிப்பிடுமென்ற போதிலும், சிறப்பாகத் தமிழ் நாகரிகத்தையே உணர்த்தும். மொகஞ்சதாரோ நாகரிகச் சின்னங்களைத் துருவி ஆராய்ந்து உலகப் புகழ்பெற்றப் புதைபொருள் ஆராய்ச்சி மேதையாகிய ஈராஸ் பாதிரியார், 'இப்பொழுது வழங்கும் மொழிகள் அனைத்திலும் தமிழே தொன்மையானது' என நிலைநாட்டியுள்ளார்.

"'வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட இந்திய இனத்தவர் திராவிடர். அவர்களின் தோற்றம் தென்னாடே என்பதை அவர்களுடைய வரலாறு மெய்ப்பிக்கிறது' என்று, மனித இன இயல் துறையில் சிறந்த மேனாட்டு அறிஞராகிய டாக்டர் பொகூசன் என்பவர் நிலைநாட்டியுள்ளார்.

"இவற்றிலிருந்து திராவிட நாகரிகமென்று கூறப்படும் தமிழ் நாகரிகமே இந்தியாவின் பழம்பெரும் நாகரிகம் என்பதும் வடமொழி நாகரிகம் பிற்கால இந்திய நாகரிகத்தின் ஒரு கூறே என்பதும் வெளிப்படை. உண்மை இவ்வாறிருக்க, வடமொழிக் குழுவின் தலைவரோ, 'இந்தியாவின் பண்பாடென்பது சமஸ்கிருத நாகரிகமே' எனத் தமிழ் நாட்டின் தலைநகரில் தமிழரிடையே துணிந்து கூறியுள்ளார்!"

கூட்ஸ்வாகன்கள் உற்பத்தி

ஆறு இந்திய நிறுவனங்களுக்கு 'ஆர்டர்' தரப்பட்டிருக்கிறதாம்

புதுடில்லி, பிப். 13—

மேற்கு வங்கம், மத்தியப் பிரதேசம், சென்னை, உத்திரப் பிரதேசம், சௌராஷ்டிரம் ஆகிய இடங்களிலுள்ள 6 இந்தியக் கம்பெனிகளில் கூட்ஸ் வாகன்கள் செய்வதற்கு இரயில்வே போர்டு ஆர்டர் தந்துள்ளதாம்.

ஒவ்வொரு கம்பெனியிலும் 200 வாகனகளுக்கு ஆர்டர் தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது.

1958 ஜூன் மாதத்திற்குள் வாகனகளை ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறதாம்.

அபேட்சகர்கள், தேர்தல் ஏஜெண்டுகள் கவனத்திற்கு:

ஓட்டுப் பெட்டி பற்றிய விபரங்கள்

"இலேசாகவும், சிறியதாகவும் செய்யப்பட்டுள்ள ஓட்டுப் பெட்டியில் தானே பூட்டிக்கொள்ளக் கூடிய சாதன அமைப்பு இருக்கிறது; பெட்டியின் மேலே வாக்குச் சீட்டு புகக்கூடிய அளவுக்குச் சரியாய் ஒரு துவாரம் இருக்கிறது; உள்ளே போடப்பட்ட வாக்குச் சீட்டு வெளியே விழமுடியாது; வாக்குப் பதிவு பூர்த்தியாகி மேல்மூடி பூட்டி முத்திரையிடப்பட்டபின், முத்திரையைக் கலைக்காமல் பெட்டியைத் திறக்கவோ, அதில் ஏதாவது கோளாறு செய்யவோ முடியாது; எனவே, பெட்டி விஷயத்தில் ஏதாவது கோளாறு செய்தால் சுலபமாக அதைக் கண்டுபிடித்துவிடலாம்; வாக்குச் சீட்டுகளை எண்ணும்போது அது தெரிந்துவிடும்," என்றெல்லாம் உறுதி தரப்பட்டிருக்கிறது.

"ஏதாவது ஒரு ஓட்டுச் சாவடியில் உள்ள ஒரு பெட்டி சேதப்படுத்தப்பட்டோ, கோளாறு செய்யப்பட்டோ, அல்லது தொலைக்கப்பட்டோ போயிருக்குமானால் அந்தச் சாவடியில் புதிதாக வாக்குப் பதிவு நடத்தப்படும்; எனவே, இவ்வாறு பெட்டி எந்த விதத்திலாவது கோளாறு செய்யப்பட்டால், அல்லது அதற்கு முயன்றால் அவ்வாறு செய்கிறவருக்கு இறுதியில் இலாபமெதுவும் கிடைக்காது. எனவே அவ்வாறு செய்வதில் பலன் எதுவுமில்லை"

என்றும், இந்திய சர்க்கார் தகவல் இலாகா தந்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறது.

சென்ற தேர்தலில் போலவே, இப்போதும் அபேட்சகர்களுக்குச் சின்னங்கள் வழங்கப்பட்டுள்ளன அவை சுலபமாக அடையாளம் கண்டுபிடிக்கக்கூடியவையும், வேறுபடுத்தி அறியக்கூடியவையுமாக இருக்கும் ஒவ்வொரு ஓட்டுச் சாவடியிலும் அபேட்சகர்களின் எண்ணிக்கைக்குச் சமமாய் ஓட்டுப் பெட்டிகள் இருக்கும். ஒவ்வொரு அபேட்சகரின் சின்னமும் பெட்டிக்கு வெளியிலும் உள்ளேயும் ஒட்டப்பட்டிருக்கும். அபேட்சகரின் பெயர் சின்னத்துக்குக் கீழே எழுதப்பட்டிருக்கும் வாக்களிப்பவர் தமது அபேட்சகரின்—தாம் யாருக்கு ஓட்டுப் போட விரும்புகிறாரோ அவருடைய சின்னம் ஒட்டியுள்ள பெட்டி எது வென்று தெரிந்து அதற்குள் தமது வாக்குச் சீட்டைப் போட்டு விடலாம்.

பெட்டிகளின்மீது ஒட்டப்பட்டுள்ள அடையாளச் சின்னங்களைக் கொண்டு அபேட்சகரின் பெட்டியை இனம் கண்டுபிடித்து ஓட்டுப் போடுவதால் தவறுகளோ குழப்பமோ ஏற்படுவதற்கு அதிக இடமிராது; எழுதப் படிக்கத் தெரியாத வாக்காளர்கள் தான் தேசத்தில் பெரும்பான்மையான வாக்காளர்களாக இருப்பதால் அவர்கள் தங்களுக்கு விருப்பமுள்ள அபேட்சகரின் அல்லது கட்சியின் அடையாளத்தைக் கண்டுபிடித்து தங்கள் வாக்கைப் பதிவு செய்வது சுலபமாக இருக்கும்.

நல்ல வழிகாட்டி?

சுப்ரீம் சோவியத் கூட்டத்தில் ரஷ்யாவின் வெளிவிவகாரக் கொள்கை பற்றி வெளிநாட்டிலாகா மந்திரி ஷெப்பிலாவ் பேசுகையில், இந்தியாவிற்கும் பண்டித நேருவுக்கும் பெரும் பாராட்டு வழங்கும் ஒரு உச்சக் கட்டத்தைத் தொட்ட போது, ரஷ்யக் கம்யூனிஸ்டு கட்சியின் வழிகாட்டியான குருஷ்சேவ், 'எல்லோரும் கைதட்டுங்கள்' என்று 'சைகை' காட்டினாராம்! உடனே கூடியிருந்த அனைவரும் கைதட்டி ஆரவாரம் செய்தார்களாம்!

இப்படி ஒரு செய்தி தரப்பட்டிருக்கிறது

நல்ல வழிகாட்டி!

வாக்களிப்பது எவ்வாறு? ஒரு விளக்கம்

மாநில சட்ட சபைக்கும், மக்கள் சபைக்கும் (பாராளுமன்றம்) ஏககாலத்தில் வாக்குப் பதிவுகள் நடக்கும் ஒவ்வொரு ஓட்டுச் சாவடியிலும் வாக்குப் பதிவதற்கான இரண்டு பிரிவுகள் இருக்கும்; ஒன்று மாநில சட்டசபைக்கும், மற்றொன்று மக்கள் சபைக்கும் இருக்கும்

மாநில சட்டசபைத் தேர்தலுக்காகப் பழுப்பு நிற ஓட்டுப் பெட்டிகள் வைக்கப்படும்; மக்கள் சபைக்குப் பச்சை நிறப் பெட்டிகள் வைக்கப்படும்.

ஒவ்வொரு வாக்காளரிடமும் முதலில் சட்டசபைத் தேர்தலுக்காக பழுப்பு நிற வாக்குச் சீட்டுத் தரப்படும். அவர் அந்த வாக்குச் சீட்டைப் பெட்டியில் போட்டபின், வெளியே வந்தவுடன் மக்கள் சபைத் தேர்தலுக்கான பச்சைச் சீட்டு அவரிடம் கொடுக்கப்படும். அவர் மக்கள் சபைக்கான வாக்குப் பதிவுப் பகுதிக்குச் சென்று அதைத் தாம் விரும்பப்பட்ட அபேட்சகர் பெட்டியில் போட்டு ஓட்டளிப்பார்.

****

தமிழர்கள் — தென்னாட்டவர்

இலங்கையில் பத்து இலட்சம்

சிங்கையில் இரண்டு இலட்சம்

மலாயாவில் ஐந்து இலட்சம்

பர்மாவில் மூன்று இலட்சம்

வடநாட்டில் ஐந்து இலட்சம்

இன்னும்

ஆப்பிரிக்காவில், போர்னியோவில் எங்கெல்லாமோ எத்தனையோ ஆயிரம் பேர் குடியேறியுள்ளனர்

★

குபேர வாழ்வு பெற அல்ல-

குருதியை வியர்வையாகக் கொட்டி குர்பியைக் கழுவிக்கொள்ள—குடும்பத்திற்கு உயிர் தர!

★

பிறந்த பொன்னாட்டில் வேலை இல்லை! வாழ வழி இல்லை!! பெற்றோர், உற்றார், மற்றோர் அனைவரையும் துறந்து அந்த நாடுகளில் 'நாடற்றவர்கள்', 'நாதியற்றவர்கள்', 'கள்ளத் தோணிகள்' என்ற பழி சொல்லையும் தாங்கிக்கொண்டு கண்ணீரும் கம்பலையுமாய் காலந் தள்ளுகின்றனர்!

'ஏக இந்தியாவில்' இந்த அவலநிலை

தென்னாட்டவருக்கு மட்டும் ஏன்?

★

மார்வார், குஜராத்தி, சேட், பனியா, சௌகார், மூல்தானி

இவர்களில் எவர்கள்

கூலிகளாய் குடியேறியுள்ளனர்?

இவர்கள் இங்கே வட்டிக்கடை நிறுவி, பேட்டை அமைத்து அல்லவா வாழுகிறார்கள்?

★

வாக்காளரே! இந்த அவல நிலை அழிய வேண்டாமா?

★

'அகில இந்தியா' எனும் ஏகத்துவம் பேசும் வடநாட்டு ஏகாதிபத்திய தாசர்களுக்கா

உங்கள் வாக்கு?

★

தாயகம் மீள—தாய்நாட்டவர் வாழப் போராடும்

தி. மு. கழக அபேட்சகர்களுக்கே

ஓட்டுத் தாருங்கள்!

20 இலட்சம் ஓட்டுப் பெட்டிகள் தயார்

57½ கோடி வாக்குச் சீட்டுகள் அச்சாகிவிட்டனவாம்

பிப்ரவரி 24-ம் தேதி துவங்கும் இந்தியாவின் இரண்டாவது பொதுத் தேர்தலில் 20 இலட்சத்திற்கு மேற்பட்ட உருக்காலான ஓட்டுப் பெட்டிகள் ஓட்டின் இரகசியத்தைப் பாதுகாக்குமாம். இத்தேர்தலில் மரப் பெட்டிகள் உபயோகிக்கப்படமாட்டாதாம்!

ஓட்டுப் பெட்டி சம்பந்தமாய் ஏதாவது சந்தேகம் ஏற்பட்டுவிட்டால், பொது மக்களுக்கு சனநாயகத் தேர்தல் முறையில் நம்பிக்கையே குறைந்துவிடும். எனவே வாக்குச் சீட்டின் இரகசியத்தைப் பத்திரமாகப் பாதுகாப்பதற்கு சாத்தியமான அளவு முன்னெச்சரிக்கையுடன் இப்பெட்டிகள் உருவாக்கப்பட்டுள்ளனவாம்!

இத்துறையில் 29,60,000 ஓட்டுப் பெட்டிகள், நாடெங்கும் ஏற்படுத்தப்படுகிற 2,00,000 ஓட்டுச் சாவடிகளில் உபயோகிக்கப்படும். இப்போது உபயோகிக்கப்படுகிற பெட்டிகளின் எண்ணிக்கை முந்திய தேர்தலில் உபயோகிக்கப்பட்டதை விட 4,87,000 அதிகமாகும். இவ்வாறு அதிகப்படியாக வைக்கப்படுகிற ஓட்டுப் பெட்டிகளின் விலை மதிப்பு ரூ 35 இலட்சமாகும்.

தேர்தலில் உபயோகப்படுத்துவதற்காக சுமார் 57½ கோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப்படும்; சென்ற தேர்தலில் 62 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிக்கப்பட்டன. வாக்குச் சீட்டுகள் இரண்டு வர்ணங்களில் தயாரிக்கப்படும்; ஒரு பிரிவு பச்சை நிறமாகவும், மீதி பழுப்பு நிறமாகவும் (ப்ரௌன்) இருக்கும். வாக்குச் சீட்டில் வெகு நுட்பமான 'டிசைன்' வேலைகள் அச்சடிக்கப்பட்டிருக்கும்; அவை வரிசையாக இலக்கம் கொடுக்கப்பட்டிருக்கும். அதனால் போலி வாக்குச் சீட்டு தயாரிப்பது அசாத்தியமாகிவிடும். அவைகளில் எந்த அடையாளமும் இடத் தேவையில்லை ஏனென்றால் அவைகளில் எந்த பெயரும் இருக்காது.

திருந்திவிட்டனராம்!

மார்க்ஸீய—லெனினிஸ கொள்கைகளுக்கு சுயமாகவே விளக்கம் கண்டு தெளிவு பெற்று இனி கண்டிப்பாக ரஷ்யாவிற்கு கண்மூடித்தனமாக ஆதரவு தரும் போக்கைக் கைவிடுவதென்று அமெரிக்கக் கம்யூனிஸ்டு கட்சி முடிவு செய்துள்ளதாம்.

'அமெரிக்க மக்களின் தேவைகளுக்கும் சனநாயக பண்புகளுக்கும் ஏற்றவாறு இனி கம்யூனிஸ்டு கட்சி தொண்டாற்றும்' என்று செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

உண்மை சொரூபம்!

திருப்போரூர், பிப். 11—

இங்கிருந்து 4 மைல் தூரத்திலுள்ள மச்சவரம் கிராமத்தில் சுமார் 40 கம்யூனிஸ்டுகள், கட்சியிலிருந்து விலகி காங்கிரஸ் கட்சியில் சேர்ந்துவிட்டனராம். இப்பகுதியில் மேலும் பலர் கம்யூனிஸ்ட் கட்சியிலிருந்து விலகிக்கொண்டுள்ளனர் என்றும் செய்தி ஒன்று வெளியாகியிருக்கிறது.

ஒரே ஆண்டில்!

1,21,900 குழந்தைகள் இறந்தனவாம்!

சென்னை சர்க்கார் தகவல்

சென்னை, பிப் 15—

சென்னை மாநிலத்தில் பிறப்பு—இறப்பு பற்றிய புள்ளி விவரங்களை அரசாங்கம் வெளியிட்டிருக்கிறது:-

1954-ம் ஆண்டில் பிறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 26 பேர்களாக இருந்தது; 1955ல் 31 பேராக அதிகரித்தது.

1954-ம் ஆண்டில் இறப்பு விகிதம் ஆயிரத்திற்கு 13 பேராக இருந்தது; 1955-ல் 14 பேராக உயர்ந்துவிட்டது

1955-ல் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை மட்டும் 1,21,900; இதற்கு முந்திய ஆண்டில் இறந்த குழந்தைகளின் எண்ணிக்கை 99,144 ஆகும்.

1955-ம் ஆண்டில் மலேரியாவினால் 1,829 பேர் இறந்தனர்.

****

உங்களுக்குத் தெரியுமா?

இந்தியாவுக்குச் சுதந்திரம் கிடைத்த சமயத்தில் ஒவ்வொரு தபால் நிலையமும் 15,038 பேர் மக்கள் தொகை கொண்ட சராசரி 52 சதுரமைல் பரப்பளவுக்குச் சேவை செய்து வந்தது; ஆனால் முதலாவது திட்ட இறுதியில் தபால் நிலையமும், சேவை செய்கிற சராசரி பிரதேசப் பரப்பளவும், மக்கள் தொகையும் முறையே 23 சதுர மைலாகவும் 6,486 பேராகவும் குறைந்துவிட்டதாம்!

சென்னை மாநிலத்தில் கைத்தறிகள் எண்ணிக்கை

சென்னை மாநிலத்தில், சேலம் மாவட்டத்தைத் தவிர்த்து இதுவரையில் பதிவாகியுள்ள கைத்தறிகளின் மொத்த எண்ணிக்கை 4,26,000 என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

இந்த எண்ணிக்கையில், பட்டு, செயற்கைப் பட்டு நெசவுக்கு உபயோகிக்கப்படும் தறிகள் சேர்க்கப்படவில்லையாம்; அம்மாதிரித் தறிகள் 30,000 இருக்கலாமென்று மதிப்பிடப்படுகிறது.

சேலம் பகுதியில் மட்டும் இதுவரையில் 90,000 தறிகள் பதிவாகியுள்ளன; மேலும் 40,000 தறிகள் பதிவாக வேண்டியிருக்கும் என நம்பப்படுகிறது

சென்னை மாநிலத்திலுள்ள மொத்தத் தறிகளின் எண்ணிக்கை அடுத்த திங்களில் மதிப்பிடப்படும்

டெலிபோன் எண்

சென்னையில் தோழர் ஏ வி. பி. ஆசைத்தம்பி அவர்களது இல்லத்தில் டெலிபோன் வசதி செய்யப்பட்டிருக்கிறது எண் 86410.

• • •

மதுரை தி மு கழகத் தேர்தல் அலுவலகத்தில் டெலிபோன் வசதி செய்யப்பட்டிருக்கிறது; எண் 693.

தோழர் எஸ் முத்து அவர்களுடன் தேர்தல் சம்பந்தமாகத் தொடர்புகொள்ள விரும்புவோர் மேற்படி தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளவும்.

மதுரை நகரில்

தி. மு. கழகத் தேர்தல் அலுவலகங்கள் திறப்பு விழா

17-2-57 அன்று மதுரை நகர மத்தியத் தொகுதி தி. மு. கழகத் தேர்தல் அலுவலகங்கள் திறப்பு விழாக்கள் நடைபெறும்; மாலை 5-மணி முதல் 7-மணிவரை தியாகராயர் படிப்பகத்திலும், 7-மணி முதல் 9-மணிவரை சுப்பிரமணியபுரத்திலும், இரவு 9 மணி முதல் 11 மணிவரை கட்ரபாளையத்திலும் அலுவலகங்கள் திறந்துவைக்கப்படும் தோழர்கள் எஸ் முத்து, எம் எஸ். இராமசாமி, கே எஸ் சந்தானம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

தேர்தல் ஊர்வலங்கள்

17-2-57 காலை 8 மணிக்கு சென்னை—அயன்புரம் 21-வது வட்ட மேட்டுத் தெரு, எண் 1/1ல் தி மு. கழகப் பணிமனையிலிருந்து பெரம்பூர் தொகுதி அபேட்சகர் தோழியர் சத்தியவாணிமுத்து அவர்களை ஆதரித்து ஓர் சைகிள் ஊர்வலம் நடைபெறும். பெரம்பூர் தொகுதி தி. மு. கழகத் தோழர்களும், சார்பு மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

* * *

17-2-57 காலை 7-30 மணிக்கு சென்னை 22-வது வட்டக் கிளையின் சார்பில் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி அவர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சார சைகிள் ஊர்வலம் ஒன்று செல்லிஸ் முனையிலிருந்து புறப்படும். கிளைக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்களைச் சேர்ந்த தோழர்கள் சைக்கிள்களுடன் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அம்பேத்கார் மறைவு அனுதாபக் கூட்டம்

18-2-57 மாலை, சென்னை வரதராசபுரம் சுப்பன் வீதியில (எழும்பூர் எஸ் ஐ ஆர். ஐஸ் பாக்டரிக்கு அருகில்) தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில டாக்டர் அம்பேத்கார் மறைவு குறித்து அனுதாபப் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி நடராசன், ஆர். ஜார்ஜ். ஆர். பி. தங்கவேலனார், வி பி. அசோகன் ஆகியோர் பேசுவர்.

போட்டியிலிருந்து விலகிக்கொண்டது பற்றி சி. பஞ்சாட்சரம் விளக்கம்

உத்திரமேரூர் தொகுதியில் நான் தி. மு. கழக அபேட்சகராக நிறுத்தி வைக்கப்பட்டதை நண்பர்கள் அறிவார்கள்.

அந்தத் தொகுதியில் நான், கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் காட்டிய ஆர்வத்தைத் துணையாகக்கொண்டு நல்ல ஆதரவு திரட்டிக் காண முடிந்தது.

காங்கிரசை நேரிடையாக எதிர்த்து நான் போட்டியிட்டால், வெற்றி நமது கழகத்துக்குக் கிடைக்கும் என்ற நம்பிக்கை, எனக்கும் நமது கழகத்தாருக்கும வளர்ந்துகொண்டு வந்தது.

இந்தியில், தமிழ்நாட்டில், காங்கிரசின் சர்வாதிகாரத்தின் விளைவாக ஏற்பட்ட சில புதிய அரசியல் மாறுதல்கள், தேர்தல் சூழ்நிலையில் புதிய சிக்கல்களை வளர்த்துவிட்டது கண்ட தலைமைக் கழகம், நிலைமைகளைப் புதிதாகக் கண்டறிந்தும் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களிடம் கூடிக் கலந்து பேசியும் சில மாறுதல்களைச் செய்ய முற்பட்டது. அந்த முறையில், உத்திரமேரூர் தொகுதியில் காங்கிரசை முறியடிக்க வேண்டுமானால், காங்கிரஸ் எதிர்ப்பாளர்களின் பலம் பிளவுபடலாகாது என்ற எண்ணத்துக்குத் தலைமைக் கழகம் வந்ததுடன், காங்கிரசை வீழ்த்துவதற்காகப் போட்டிகளைத் தவிர்க்க வேண்டி, நான் விலகிக் கொள்ள வேண்டுமென்று எடுத்துக் காட்டிற்று.

நான், ஆண்டு பலவாக நமது இயக்கத்தின் கட்டுப்பாடுகளுக்கு அடங்கி நடப்பதை ஒரு பெருமை என்று எண்ணிக்கொண்டு வரும் ஒரு போர்வீரன் என்ற முறையில், தலைமைக் கழகம் காட்டிய பாதையில் செல்லத் தீர்மானித்து, தேர்தல் போட்டியிலிருந்து விலகிவிடச் சம்மதமளித்தேன்.

இதனால் நமது கழகத்தின் வளர்ச்சிக்கும் செல்வாக்குக்கும் குந்தகம் ஏற்பட்டுவிடாது என்பது எனக்கு விளக்கப்பட்டது; நானும் அதனை உணர்ந்த பிறகே, இந்த ஏற்பாட்டுக்கு என் ஒப்புதலை அளித்தேன்.

காங்கிரஸ், இந்தத் தொகுதியில் வீழ்த்தப்பட, இந்த ஏற்பாடு நிச்சயமாகப் பயன்படும் என்பதை அறிந்தே நான் விலகிக் கொண்டேன்.

எனக்காக இதுகாறும் வரையில் ஆதரவு திரட்டும் பணியில் நல்லார்வத்துடன் ஈடுபட்ட ஏராளமான நண்பர்களுக்கெல்லாம் மனச்சங்கடமும் திகைப்பும் கோபமும்கூட ஏற்படும் என்பதை அறிந்து வருந்துகிறேன்.

என்றாலும், கழகத்தின் முடிவு, நம் ஒவ்வொருவரின் சார்பிலேயும் செய்யப்படுவது என்ற முறையில், நாம் அனைவரும் அதற்கு மதிப்பளித்து அதனை நிறைவேற்றி வைக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். அந்தக் கடமை உணர்ச்சியை நான் பெரிதாக மதிப்பவன். எனவேதான், நான் தேர்தல் போட்டியிலிருந்து விலகி, காங்கிரஸ் தோற்பதற்கான வாய்ப்பினை வலுவாக்க இசைவு அளித்தேன்.

பல இன்னல்களைப் பொருட்படுத்தாமல் உற்சாகத்தோடு கழகத் தோழர்களும் ஆதரவாளர்களும் காங்கிரஸ் எதிர்ப்பாளர்களும் எனக்காகப் பணியாற்றியமை குறித்து அவர்கட்கெல்லாம் நன்றி கூறிக்கொள்வதுடன், கழகம் மேற்கொண்ட இந்த முடிவு, கசப்பு மருந்து கொடுத்தேனும் பரிகாரம் காண விரும்பும் மருத்துவ முறை போன்றது என்றெண்ணி, சங்கடத்தினின்றும் விலக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் நல்லாதரவு மறவாத நண்பன்,

சி. பஞ்சாட்சரம்

புரட்சி நடிகர்

எம். ஜி. இராமச்சந்திரன் சுற்றுப்பயண விவரம்

பிப். 19:
காலை 8 மணி — வழுதாவூர்; 9 மணி: விழுப்புரம் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 2 மணி: மாயவரம் (சிறப்புக் கூட்டம்); 4 மணி: பொறையார் (சிறப்புக் கூட்டம்) 5 மணி: நாகூர் (சிறப்புக் கூட்டம்); 6 மணி: நாகை: இரவு 8 மணி: குடந்தை (சிறப்புக் கூட்டம்); 10 மணி: அதிராம்பட்டினம்; 11 மணி: பட்டுக்கோட்டை (சிறப்புக் கூட்டம்); 12 மணி: மன்னார்குடி (நாடகத் தலைமை).

பிப். 20:
காலை 9 மணி: தஞ்சை (சிறப்புக் கூட்டம்); 11-மணி: கந்தர்வகோட்டை (பொதுக்கூட்டம்); பகல் 1 மணி: லால்குடி (பொதுக் கூட்டம்); மாலை 4 மணி: (சேலம்) வேலூர் (பொதுக் கூட்டம்); 6 மணி: கரூர் (சிறப்புக்கூட்டம்); இரவு 10 மணி: திண்டுக்கல் 'இன்பக் கனவு' நாடகம்.

பிப். 21:
காலை 9 மணி: சித்தையன் கோட்டை; 11 மணி: பட்டிவீரன்பட்டி; பிற்பகல் 4 மணி; உடுமலைப்பேட்டை தொகுதி.

பிப். 22, 23, 24:
நாகர்கோயில் — நாடகங்கள்.

பிப். 25:
காலை 10 மணி: ஸ்ரீவில்லிபுத்தூர் (சிறப்புக் கூட்டம்); பிற்பகல் 4 மணி: திருக்கோட்டியூர் தொகுதி

பிப். 26:
காலை 10 மணி: கம்பம் (சிறப்புக்கூட்டம்); பகல் 12 மணி: உத்தமபாளையம் தொகுதி; பிற்பகல் 4 மணி: தேனி தொகுதி; இரவு 10 மணி: மதுரை 'சுமைதாங்கி' நாடகம்.

பிப். 27:
தேனி தொகுதி; இரவு 9 மணி: திருச்சி.

மார்ச் 1:
காஞ்சிபுரம் தொகுதி.

மார்ச் 2:
காலை 8 மணி: லால்பேட்டை; 9-30 மணி: சிதம்பரம் (சிறப்புக் கூட்டம்); 10-30 மணி: திருமுஷ்ணம்; பிற்பகல் 2 மணி: நெல்லிக்குப்பம்; 4 மணி: கடலூர்; 6 மணி: கள்ளக்குறிச்சி.

மார்ச் 3:
சேலம தொகுதி.

மார்ச் 4:
காலை 10 மணி: அரூர்; 12 மணி: சிங்காரப்பேட்டை; பிற்பகல் 3 மணி: திருப்பத்தூர் (வ.ஆ.); 5 மணி: கந்திலி; 6-30 மணி: ஜோலார்பேட்டை; 8-30 மணி: வாணியம்பாடி.

மார்ச் 5, 6:
சென்னை நகரத் தொகுதிகள்.

மார்ச் 8:
குளித்தலைத் தொகுதி.

மார்ச் 9:
மதுரை மத்திய தொகுதி.

குறிப்பு:—தோழர் எம் ஜி இராமச்சந்திரன் அவர்களுடன், நடிகர் என் எஸ். நாராயணன் அவர்களும் சுற்றுப்பயணத்தில் கலந்து கொள்வார். இச்சுற்றுப்பயணம் இனிது நடைபெற வேண்டுமானால், ஆங்காங்குள்ள கழக நிர்வாகிகளும், கழக அபேட்சகர்களும் அதற்கான ஏற்பாட்டினை ஒழுங்கு பெறச்செய்து, தோழர் எம். ஜி ஆர். அவர்களுக்கு, கூட்டநெருக்கடியில் யாதொருவித குறைபாடோ, தொல்லையோ, ஏற்படாதவாறு, முன்னெச்சரிக்கையுடன் தக்க முறையில் ஆவன செய்யுமாறு வற்புறுத்திக் கேட்டுக் கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி மு. க)

பொதுச்செயலாளர்

இரா. நெடுஞ்செழியன் நிகழ்ச்சிகள்

★

18-2-57 மாலை 6 மணிக்கு, பூந்தமல்லியிலும், இரவு 8 மணிக்கு பரந்தூர் கிராமத்திலும் நடைபெறும் தேர்தல் பொதுக்கூட்டங்களில் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் கலந்து கொளளுவார்.

தேர்தல் கூட்டங்கள்

★

சென்னை—வண்ணையில்

16—2—57 மாலை 6 மணிக்கு வண்ணை கருணாகரர்ஸ் மைதானத்தில் தோழர் எஸ். பி. டி. திராவிடமணி தலைமையிலும, 17—2—57 மாலை 6 மணிக்கு இராயபுரம், கல்மண்டபம் மார்க்கெட் ரோடு பனைமரத்தொட்டி அருகில் தோழர் இளஞ்சேரன் தலைமையிலும் தொகுதி அபேட்சகர் தோழர் என். சீவரத்தினம் அவர்களை ஆதரித்துப் பொதுக்கூட்டங்கள் நடைபெறும். தோழர்கள் க. அன்பழகன், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து, ஜெகஜ்ஜோதி நாகராசன், ஜே. பி. அமுதா, எஸ். கே. விரமணி, தோழர் என். சீவரத்தினம், மற்றும் பலர் சொற்பொழிவாற்றுவர்.

ஊர்வலம்

17—2—57 பகல் 1 மணிக்கு எம். சி. ரோடு, மத்தியத் தேர்தல் அலுவலகத்திலிருந்து தோழர் டி. பி. சுந்தரம் தலைமையில் ஊர்வலம நடைபெறும். அதுபோது தொகுதியைச் சேர்ந்த பல இடங்களில் கழகக் கொடிகள் பறக்கவிடப்படும்.

வல்லூர்

18—2—57 மாலை 4 மணிக்கு வல்லூர் தி. மு. கழகத் துவக்க விழாவும், பொன்னேரி தனித் தொகுதி தி. மு. கழக அபேட்சகர் தோழர் ஓ. செங்கம் அவர்களை ஆதரித்துத் தேர்தல் பிரச்சாரக் கூட்டமும தோழர் டி. சண்முகம் தலைமையில் வல்லூர் பாடசாலைத் தெருவில் நடைபெறும். அண்ணா சொற்பொழிவாற்றுவார்.

வளர்புரம்

19—2—57 மாலை 4 மணிக்கு வளர்புரத்தில் தோழர் கணபதி தலைமையில் தேர்தல் பொதுக்கூட்டம் நடைபெறும். தோழர்கள் என். வி. நடராசன், வி. முனுசாமி, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, எம். கே. அம்பிகாபதி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

அரக்கோணம்

19—2—57 இரவு 7 மணிக்கு அரக்கோணத்தில் தோழர் எம். கே. அம்பிகாபதி தலைமையில் நடைபெறும தேர்தல் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் என். வி. நடராசன், ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, முகவை-ஆர். எஸ். பாண்டியன், வி. டி. சாமி ஆகியோர் பேசுவர்.

அண்ணா

சுற்றுப்பயணம

பிப். 17 மாலை: சேந்தமங்கலம் (சேலம்) இராசிபுரம்தொகுதிகளில் பொதுக்கூட்டங்கள்;

பிப். 18 மாலை 4 மணி: வல்லூர்; மாலை 5 மணி: மீஞ்சூர்; இரவு 7 மணி: ஆரணி; இரவு 9 மணி: பொன்னேரி

திருமணங்கள்

18 2-57 காலை 9-30 மணிக்கு சென்னை—புரசை பிளவர்ஸ் ரோடு 1-வது தெரு எண் 8 இல்லத்தில் தோழர் கு சுப்பிரமணியன்—தோழியர் பிச்சையம்மாள் திருமணம் தோழியர் சத்தியவாணிமுத்து தலைமையில் நடைபெறும். தோழர் க. அன்பழகன் வாழ்த்துரை வழங்குவார்.

17—2 57 காலை 8-மணிக்கு சென்னை புரசை அருணாசல பண்டாரம் தெரு எண். 29 இல்லத்தில் தோழர் ஏ கே. சாமி தலைமையில் தோழர் அ வே. துரைசிங்கம்—தோழியர் கு. இல்லாமல்லி திருமணம் நடைபெறும. என். வி. நடராசன். ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, ஆதியப்ப நாயக்கன் செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர்: இரா நெடுஞ்செழியன் எம். ஏ.

தி. மு. கழக நிதிக்கு - திரைப்படக் காட்சி

சென்னை - தங்கசாலை

கிருஷ்ணா டாக்கீசில்

கிருஷ்ணா பிக்சர்ஸ்

'மதுரை வீரன்'

காட்சி நேரத்தில்

புரட்சி நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன்

கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்

செந்தமிழ் விறலி டி. ஏ. மதுரம்

ஆகியோர் மேடையில் தோன்றுவர்

★

பேராசிரியர் க. அன்பழகன் அவர்களிடம்

தேர்தல் நிதி அளிக்கப்படும்.